**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>**
**<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்</u>**

**MCOP No. 110/2022** **10-10-2025** **எ.ம.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | ஸ்டீபன் | தொழில் |
| த/பெ | கஸ்பர் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| ஜாதி | | மாவட்டம் |
| சமயம் | | |

**<u>முதல் விசாரணை</u>**

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி. பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன். TN 88 C 5326 இருசக்கர வாகனத்தின் காப்பு சான்று உண்மை நகல் எ.ம.சா.ஆ.1, துரையூர் காவல நிலைய குற்ற எண். 149/2023 முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் எ.மா.சா.ஆ.2, 24.01.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் திருப்பப்பட்ட அஞ்சல் உறை எ.மா.சா.ஆ.3 (2 வரிசை). மனு தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட விபத்தை ஏற்படுத்திய லாரியின் பதிவு எண் TN 88 C 5326 என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மேற்படி லாரி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.1 எங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்டது என்றால் அது எங்கள் நிறுவனத்தால் இருசக்கர வாகனத்திற்கு வழங்கப்பட்டது. இந்த வழக்கில் எங்கள் நிறுவனம் காப்பீடு வழங்குவதற்கு முன்பு மேற்படி

வாகனத்தின் பதிவு சான்றை சரிபார்த்தோமா என்றால் சரி பார்த்து இருப்பார்கள் எனக்கு நேரடியாக தெரியவில்லை. பதிவு சான்றை சரிபார்த்துவிட்டு தான் காப்பீட்டு சான்று வழங்குவார்கள் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் மேற்படி நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆர்சி புக் மற்றும் மேற்படி காப்பீட்டுக்கான தொகையை செலுத்தினால் மட்டுமே எங்கள் நிறுவனத்தில் மேற்படி காப்பீட்டுச் சான்று வழங்கப்படும் என்று சொன்னால் சரிதான். மேற்படி வாகனத்தின் பதிவு சான்று இணையத்தில் பதிவு செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது.

2. TN 88 C 5326 என்ற வாகனம் லாரி தான் என்றாலும் இருசக்கர வாகனம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. மேற்படி வாகனம் இருசக்கர வாகனம் தான் என்பதை காட்டுவதற்கு நான் அதனுடைய பதிவு சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை இறுதி விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்று சொன்னால் சரியல்ல இணையத்தில் அது விசாரணையில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. புகாருக்கு பின்னிட்டு இவ்வழக்கு தொடர்பான ஆவணங்களை நான் காவல் நிலையத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் புகார் கொடுக்கும் போது அதனுடன் இணைத்து தாக்கல் செய்து விட்டோம். நான் தாக்கல் செய்த புகார் தவறானது என தள்ளுபடி செய்துவிட்டது என்றாலும் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுப்பதில் இருந்து தப்பிப்பதற்காக மேற்படி காப்பீடு லாரிக்கு கொடுக்கப்பட்டது அல்ல என்றும் இருசக்கர வாகனத்திற்கு கொடுக்கப்பட்டது என்றும் பொய்யாக வழக்காடுகிறோம் என்று சொன்னால் சரியல்ல.

3. 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் முகவர் மீது மட்டும் தாக்கல் செய்துள்ளோம். எங்கள் நிறுவனத்தின் முகவர்கள் தவறு செய்தால் அது எங்கள் நிறுவனம் தவறு செய்ததால் தான் கருதப்படும் என்று சொன்னால் சரி அல்ல.எனவே எங்கள் நிறுவனம் தான் சட்டப்படி இழப்பீடு தர வேண்டும் என்று

சொன்னால் சரியல்ல. சம்பவ சமயத்தில் மேற்படி காப்பீட்டை வழங்கியவர் எங்கள் நிறுவனத்தின் அதிகார பூர்வ முகவர் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.13 09:39:16 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.